**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

**S.C. No:39/2021**

| | | |
|---|---|---|
| Ranking of Witness | .. | **PW -16** |
| Name | .. | **Tamilarasan** |
| Father Name | .. | |
| Village | .. | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of December 2022 .

---

**முதல் விசாரணை**

**நான் Trichy John Vestry School வளாகத்தில் வசித்து வருகிறேன். திருச்சி ராயல் ரோட்டில் சோழா கெஸ்ட் ஹவுஸ் கடந்த 7 வருடங்களாக நடத்தி வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஜூன் 2018ல் ஒரு நாள் சென்னை ராயபுரம் போலீசார் மே 2018ல் என்னிடம் நிர்மலா என்பவர் சோழா கெஸ்ட் ஹவுஸில் தங்கி இருந்தாரா என விசாரித்தார்கள். நான் அதற்கான ஆவணங்களை பார்த்ததில் மேற்படி நிர்மலா என்பவர் 2017 ஜூன் மாதத்திலும் அதன் பிறகு மே 2018ல் தங்கி இருந்த விவரத்ததை போலீசாரிடம் தெரிவித்தேன். நிர்மலா என்பவருடன் சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் ஒருவர் இரண்டு முறையும் தங்கி இருந்தார். 2018 ம் வருடத்தில் நிர்மலாவும் அந்த நபரும் மே மாதம் 13ம் தேதி மாலை வந்து தங்கி மறுநாள் 14.05.2018 அன்று மாலை ரூமை காலி செய்து சென்று விட்டார்கள். ரூம் எடுத்தபோதும் காலி செய்தபோதும் மேற்படி இருவரும் இருந்தனர். 2018ம் ஆண்டு நிர்மலா**

என்பவரிடம் ரூம் வாடகையாக U:/600 – வாங்கப்பட்டது. ரூம் போட்ட நிர்மலா என்பவரிடம் பாஸ்போர்ட் அத்தாட்சியாக வாங்கப்பட்டது, ரூம் வாடகை U:/600f;F பில் கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் இந்த பில் தான் ரூம் வாடகைக்காக கொடுக்கப்பட்டதாகும். அது அ.சா.ஆ.7/அ.சா.16 . அந்த பில்லின் அசல் ஆவணம் மேற்படி நிர்மலாவிடம் ஒப்படைக்கப்படட்டது, நகல் மட்டும் தான் நாங்கள் வைத்துக்கொண்டோம். அதனை போலீசாரிடம் ஒப்படைத்தேன். நிர்மலா மற்றும் அவருடன் வந்த நபர் எங்களது கெஸ்ட் ஹவுசில் தங்கி இருந்ததற்கு கடிதம் ஒன்று கொடுத்தேன். அநத கடிதம் அ.சா.ஆ8/அ.சா.16 ஆகும். நிர்மலா தங்கி இருந்த தேதியில் இருந்து சுமார் இருபது நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தனர் .

4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது சொல்லிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன். நான் தங்கி இருப்பது Trichy John Vestry School ஆகும். நான் நடத்தி வருவதாக சொல்லப்படும் சோழா ஹோட்டலில் 24 அறைகள் உள்ளன. நான் Trichy John Vestry Schoolல் உதவி தலைமை ஆசிரியராகவோ, பள்ளி ஆசிரியராகவோ எந்த கால கட்டத்திலும் பணிபுரியவில்லை. எனது குடும்பத்தில் வேறு எவரும் Trichy John Vestry School பள்ளியில் ஆசிரியராக இல்லை. நான் Trichy John Vestry School நடத்தி வரும் ஹாஸ்ட்டலில் 1983 முதல் 2014 வரை வார்டனாக இருந்தேன். 2014க்கு பின்னர் Trichy John Vestry School வளாகத்தில் கேம்பஸ் சூப்பர்வைசராக இருக்கிறேன். நான் தற்போதும் Trichy John Vestry School- ல் ஆசிரியராகவும் வார்டனாகவும் பணி) புரிந்து வருகிறேன் என்றாலும் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சோழா ஹோட்டலின் தனிப்பட்ட உரிமையாளர் ஆவேன். அந்த ஹோட்டலை நிர்வாகம் செய்ய வரவேற்பாளர் உள்ளார் என்றால் சரிதான். அறை பதிவு செய்வது, பில் வழங்குவது ஆகியவை வரவேற்பாளரின் பணி ஆகும். நானும் அந்த பணியை அவ்வப்போது செய்வேன். அ.சா.ஆ.7ல் உள்ள பில்லில் வரவேற்பாளர் தான் கையொப்பம் செய்துள்ளார். 13.05.2018 அன்று எங்களது சோழா கெஸ்ட் ஹவுசில் எத்தனை பேர் தங்கி இருந்தார்கள் என்ற விவரம் தற்போது தெரியாது. பில் வழங்கிய வரவேற்பாளரை விசாரித்து வீட்டு தான் போலீசார் என்னை விசாரித்தார்கள்.அந்த வரவேற்பாளர் பெயர் உலகநாதன் ஆகும். நிர்மலாவுடன் தங்கி இருந்த ஆண் நபரிடம் எவ்வித அத்தாட்சியும் வாங்கவில்லை. ஏ்ங்களது ஓட்டல் வரவேற்பறையில் சிசிடிவி வசதி இருந்தது. போலீசார் அந்த ஆண் நபரின் அடையாளங்களை தெரிந்து கொள்வதற்கு எங்களது ஓட்டலில் சிசிடிவியை ஆய்வு செய்தார்கள் அதனை பெற்று கொள்ளவில்லை. பில்லில் தேதி

குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆவணங்களை நான் பின்னிட்டு தயார் செய்து போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் போலீசாரிடம் கொடுத்த கடிதத்தில் தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வெஸ்ட்ரி பள்ளியில் நான் பணிபுரிவதால் சோழா ஓட்டல் நிர்வாகமும் லாட்ஜ் நிர்வாகம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஓரளவு தெரியும். கெஸ்ட் ஹவுசில் தங்கும் நபர்கள் பற்றி வருகை பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அந்த பதிவேட்டில் தங்கும் நபர்கள் கொண்டு வரும் சாமான்களை (லக்கேஜ்) பதிவு செய்வதில்லை. நிர்மலா என்பவர் லக்கேஜ் கொண்டு வந்தது குறித்து நான் போலீஸ் விசாணையில் சொல்லவில்லை. வருகை பதிவேட்டில் தங்கும் நபர்களுக்கு அறை ஒதுக்கும்போது காலி செய்யும்போதும் கையொப்பம் போடுவார்கள். பில்லில் பணம் கட்டுபவர்களிடம் கையொப்பம் பெறுவது கிடையாது. வருகை பதிவேடு மற்றும் பில் புத்தகத்தை உள்ளூர் காவல் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் கொடுத்து கையொப்பம் பெற வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையின்போது வருகை பதிவேட்டையோ பில் புத்தகத்தையோ என்னிடம் இருந்து வாங்கி செல்லவில்லை. 05.06.2017 அன்று தங்கியதற்கான பில்களை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. 05.06.2017 அன்று தங்கி 06.06.2017 அன்று அறையை காலி செய்து சென்றது குறித்து நான் போலீசாரிடம் கொடுத்த கடித்தத்திலும் குறிப்பிடவில்லை. 05.06.2017 அன்று எந்த அறையில் தங்கி இருந்தார்கள் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.05.06.2017 அன்று தங்கியதற்கான பில்லை போலிசாரிடம் கொடுத்தேனா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. பில் புத்தகங்களை ஜெராக்ஸ் எடுத்து போலீசாரிடம் கொடுத்தேன். அதனை வாங்கியதற்கு போலீசார் எனக்கு அத்தாட்சி எதுவும் கொடுக்கவீல்லை. பில்லில் போலீசார் கையொப்பம் எதுவும் இல்லை. நிர்மலா கெஸ்ட் ஹவுசில் தங்கி இருந்ததற்கு பில் தவிர வேறு எந்த ஆணவமும் இல்லை என்றால் வருகை பதிவேட்டில் நிர்மலா கையொப்பம் செய்துள்ள ஆவணம் உள்ளது.

(இத்துடன் 1 முதல் 3 வரையான எதிரிகள் 4வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 19.12.2022 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.**

**23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்**
**23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .**
**அல்லிக்குளம், சென்னை–3.**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 1

**S.C. No: 39/2021**

| | | |
|---|---|---|
| Ranking of Witness | .. | **PW -17** |
| Name | .. | **Srikumari** |
| Father Name | .. | |
| Village | .. | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th December -2022 .

---

முதல் விசாரணை

**நான் என்–5 ஆர்.எஸ்ஆர்.எம் புறக் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் சம்பவ காலமான 2018ல் ராயபுரம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலரா பணிபுரிந்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் ராஜாராபர்ட் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் அவருடன் கடந்த 09.06.2018 அன்று திருச்சி சோமரசன் பேட்டையில் உள்ள வாசன் செட்டி 7வது குறுக்கு தெருவிற்கு சென்றேன். அங்கு ஆஜர் எதிரி சுதா என்பவர் இருந்தார். அங்கு காலை 07.00 மணிக்கு சாட்சிகள் சங்கர், முத்தமிழ் செல்வன் ஆகியோர் முன்னிலையில் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஹீரோ பிளசர் இரு சக்கர வாகனம் பதிவு எண் TN48AD 4817 மற்றும் இரண்டு சிம் கார்டு சாம்சங் செல்போன் ஆகியவற்றை அதே தினம் காலை 08.15 மணிக்கு ஆய்வாளர் கைப்பற்றினார். அதனை கைப்பற்றியபோது மேற்கண்ட சாட்சிகள் அங்கு இருந்தனர்,இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.**

<u>4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது சொல்லிய சங்கதிகளை தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன். திருச்சிக்கு புலன் விசாரணைக்கு செல்ல வேண்டும் என ஆய்வாளர் என்னிடம் 18.06.2018 மாலை 07.00 மணிக்கு தெரிவித்தார். அன்றைய தினம் இரவு சுமார் 11.00 மணி அளவில் நானும் ஆய்வாளரும் திருச்சி நோக்கி சென்றோம். அன்றைய தினம் எங்களுடன் செந்தில் குமார் என்ற காவலரும் உடன் வந்தார். நாங்கள் திருச்சிக்கு ஆய்வாளர் வாகனத்தில் செல்லவில்லை. வாடகை காரில்' சென்றோம். அந்த வாடகை கார் அவசரத்திற்காக எடுத்து சென்றோம். அந்த காருக்கான வாடகையை ஆய்வாளர் பில் போட்டு கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. வாடகை காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. அன்றைய தினம் திருச்சிக்கு செல்வதற்கு எனக்கும் செந்தில்குமாருக்கும் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதா என்றால் ஆய்வாளருடன் சென்றதால் அவ்வாறு வழங்கப்படவில்லை. காவல் நிலையத்தை விட்டு வெளியே சென்றால் பாஸ்போர்ட் பெற வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அன்றைய தினம் நாங்கள் மூவரும் ஆஜர் 4வது எதிரி வீட்டிற்கு நேரடியாக சென்றோம். 4வது எதிரி குடியிருந்த வீட்டின் எல்லைக்குட்பட்ட சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில்தகவல் தெரிவித்து அங்கிருந்து யாரையும் அழைத்து செல்லவில்லை. 4வது எதிரியீன் வீட்டுக்கு அருகாமையில் நிறைய வீடுகள் இருந்தன. நாங்கள் சென்ற போது 4வது எதிரியின் வீட்டில் அவர் மட்டும் தான் இருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் 4வது எதிரியின் வீட்டில் வைத்து பதிவு செய்யப்பட்டது, அதனை ஆய்வாளர் தான் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும்
உடன் இருந்ததற்காக நான் கையொப்பம் போட்டேன். 4வது எதிரியை கைது செய்த பிறகு நாங்கள் சென்ற வாடகை காரில் அவரை சென்னை ராயபுரம் காவல் நிலையத்திற்கு நேரடியாக அழைத்து வந்தோம். அவரது கைது பற்றி உள்ளூர் காவல் நிலையத்தில் தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. 4வது எதிரி குடியிருந்த வீடு எந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்று எனக்கு தெரியாது. 4வது எதிரியை கைது செய்து கிளம்பிய போது காலை சுமார் 08.30 மணி இருக்கும். நானும் ஆய்வாளர், காவலர் செந்தில்குமார் மற்றும் 4வது எதிரியுடன் காரில் கிளம்பிவிட்டோம். ஆய்வாளர் காவலர் செந்தில் குமாரை விசாரணை செய்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. கைப்பற்றப்பட்ட இரு சக்கர வாகனத்தை வாடகை காரின் மேலே வைத்து சென்னைக்கு கொண்டு வந்தோம். அன்றைய தினம் நான் ஆய்வாளருடன் சென்றதற்கு பாக்கெட் டைரியில் குறிப்பிட்டுள்ளேன் அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளர் என்னிடம் இருந்து வாங்கவில்லை . நான் சொன்ன நாள் சொன்ன தேதியில் நேரத்தில் நான் திருச்சிக்கு செல்லவில்லை என்றாலும் ஆஜர் 4வது எதிரி எனது முன்னிலையில் கைது

**செய்யப்படவில்லை என்றாலும் அவர் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் வழக்கின் தடய சொத்தும் கைப்பற்றப்படவில்லைஎ என்றாலும் நான் போலீசார் என்பதால் ஆய்வாளர் கேட்டுக்கோண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**
**( மேற்படி குறுக்கு விசாரணையை` 1 முதல் 3 வரையான எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது)**

**மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 15.12.2022 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.**

**23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்,**
**23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .**
**அல்லிக்குளம், சென்னை—3.**